**லக்கல பள்ளேகம பிரதேச சபை - 2022**

---------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்கல பள்ளேகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு லக்கல பள்ளேகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 994,850 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் தேதியில் உள்ளவாறு 02 கடைகளில் இருந்து பெறவேண்டிய ஒரே தடவை தொகை ரூபா 162,887 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | முன்னைய ஆண்டின் 06 நிர்மாணச் செயற்திட்டங்களின் பட்டியலை தீர்வு செய்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டு இருந்த ரூபா 2,953,840 தொகை மீளாய்வாண்டின் மூலதன மானிய கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதாக அதனை சீராக்கம் செய்வதாக | - மேற்படி - |
| (ஈ) | மத்திய மாகாண சபையிடமிருந்து மீளாய்வாண்டிற்குரிய சம்பள மீள் நிரப்பளுக்காக ரூபா 510,448 தொகை கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முன்னைய ஆண்டின் வாகன பட்டறி பெறுமதி கணக்கில் இருந்து விடுபட்ட தவறை சீராக்கும் போது தவறுதலாக கணக்கு வைக்கப்பட்ட காரணமாக திரண்ட நிதியம் மற்றும் இருப்பு மீதி ரூபா 126,000 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 97,580 ஆன அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மூலதனம் ஆக்கப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்வதாக அதனை சீராக்கம் செய்வதாக | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதி அண்மித்து அறிக்கையின் பிரகாரம் மீதியுடன் ஒப்பிடும் போது ரூபா 21,302,040 ஆன இணக்கமின்மை ஒன்று அவதானிக்கப்பட்டது | அட்டவணைகளில் தவறுகளுடன் கூடிய காணப்படுவதுடன் அட்டவணைகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காரணங்களை இனங்கணடு சீராக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருமான செலவினக் கணக்கில் காண்பிக்கப்பட்ட 09 வருமான விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பயன்பாட்டு பதிவேடுகளின் மீதிகளுக்கு இடையே ரூபா 257,300 ஆன இணக்கமின்மை ஒன்று இருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதற்க நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 2,241,938 ஆன தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டின் போது மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மீதிகள் இனங் காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும் |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 21,137,791 ஆன 09 கணக்கு விடயங்களுக்குரிய சொத்து | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிக்கும் போது அட்டவணைகளை | கணக்கு மீதிகளுக்குரிய பதிவேடுகள் அட்டவணைகள் |

| | | |
|---|---|---|
| பதிவேடுகள், உறுதிகள், மீதி உறுதிப்படுத்தல்கள், கடன் பட்டோர் பதிவேடு மற்றும் அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படா மையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாது இருந்தது. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும் |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) விதிகள் மற்றும் உப உறுப்புரை 2015 பெப்ரவரி 02 ஆம் திகதிய 1900/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானயின் கீழ் மத்திய மாகாண சபையின் அறிவித்தலின் 02 ஆம் இலக்க விதி | செலவினங்களை நிரப்பலுக்காக பட்டியல் பெற்றுக் கொள்ளப்படாமல் உறுப்பினர்களின் எரிபொருள் படிகளாக ரூபா 336,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்வதாகவும் ஓட்ட குறிப்புகளைச் சமர்ப்பித்த உறுப்பினர்களுக்கு மாத்திரம் உரிய மாதங்களுக்கு எரிபொருள் படிகள் செலுத்தியதாக | வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக குடிரசின் நிதிப்பிரமாணம் | | | |
| i. நிதிப்பிரமாணம் 371(5) | 07 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 153,200 ஆன காலாவதியான கட்டுநிதி மீதி விடுவிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சீராக்கவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii. நிதிப்பிரமாணம் 571(3) | கெப் வண்டி திருத்தத்துக்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடம் இருந்து 2016 ஜனவரி 16 ஆம் திகதி ரூபா 1,343,710 ஆன நிதி ஏற்பாடு கிடைத்திருந்த போதும் திருத்தங்களை முறைப்படி நிறைவேற்றாத காரணத்தினால் குறித்த நிறுவனத்துக்கு பணத்தை கொடுப்பனவு செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் | சரியாக திருத்த வேலைகளை மேற்கொள்ளப்படாததால் கொடுப்பனவு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த நிறுவனத்திற்கு உரிய திருத்தங்களை சரியாக செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதும் அதனை இதுவரை செய்யப்படாததால் கொடுப்பனவு நடவடிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை | திருத்த வேலைகளை விரைவில் நிறைவேற்றிக் கொண்டு தீர்வு செய்யப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| கிடைத்த பணத்தை மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | என்பதாக | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 871,619 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 1,526,446 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| (i) | வீதவரியும் வரியும் | 536,000 | 551,165 | 467,145 | 300,550 | 835,000 | 688,093 | 659,428 | 216,530 |
| (ii) | வாடகை | 3,902,440 | 1,231,131 | 1,205,735 | 733,551 | 8,915,200 | 2,954,267 | 2,176,393 | 858,766 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 328,000 | 67,700 | 67,700 | - | 350,000 | 200,450 | 200,450 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,022,300 | 2,527,175 | 2,183,648 | 1,131,910 | 2,296,000 | 1,623,443 | 1,268,470 | 1,201,012 |
| | | 7,788,740 | 4,377,171 | 3,924,228 | 2,166,011 | 12,396,200 | 5,466,253 | 4,304,741 | 2,276,308 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| **(அ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 59,151 ஆக இருந்ததுடன் அதில் பழைய நகரத்தினல் அமைந்துள்ள 05 கடைகளுக்காக 05 ஆண்டுகளுக்கு முன்னிருந்து பெறவேண்டிய ரூபா 11,400 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 128,970 ஆன கழிவுப்பொருள் கட்டண வருமானத்தில் ரூபா 16,110 அதாவது 12 சதவீதம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 281,940 ஆன கழிவுப்பொருள் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை தற்போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும் |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 464,482 ஆக இருந்தது. | உண்மையாகவே இவ்வாறான மீதியொன்ற இல்லையெனவும் இது தொடர்பாக பரீட்சித்து நிலுவைகள் இருந்தால் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெற வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) 2003 ஆம் ஆண்டிலிருந்து நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 70,489 ஆன நிர்மாண கடன்கொடுத்தொர் மீதியொன்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்ய வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுற்றாடல் அனுமதிபத்திரங்களின் செல்லுபடி காலத்தை மிகைத்திருந்த 32 வியாபாரங்களின் அனுமதி பத்திரங்களை மீள புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் ரூபா 96,000 அனுமதிப்பத்திர கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே சுற்றாடல் அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய வியாபாரங்களை இனங் காண்பதற்காக 2020 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வியாபாரங்களை இனங்காணுதல் மற்றும் கணிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது செயல்படுத்தப்பபட்டுள்ள தாகவும் விரைவில் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | கணிப்பீடுகளை மேற்கொண்டு சுற்றாடல் அனுமதி பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்ல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு பதில்கடமை படிகள் கொடுப்பனவிற்கு மேலதிகமாக கடமைக்கு அறிக்கையிடுவதற்காக பிரயாணச் செலவுகள் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 146,101 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பிரயாணப்படி மற்றும் இணைந்த படிகளை மீண்டும் பிரதேச சபைக்கு அறவிடுவதற்காக தம்புள்ள பிரதேச சபை செயலாளர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 9,092,144 ஆன 03 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங் காணப்படாத 09 சொத்து உருப்படிகள் மற்றும் மின்பிறப்பாக்கியொன்று 02 ஆண்டுகள் முதல் 20 ஆண்டுகள் இடைப்பட்ட காலவீச்சில் விளைவற்றும் குறைப்பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | திருத்த வேலைகளை செய்து பயன்பாட்டுக்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கும் கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 செயற்திட்டங்கள். பணிகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| முன்னைய ஆண்டில் ரூபா 4,000,000 ஆன மதிப்பீடு ஒன்றின் பிரகாரம் மாகாண நிச்சயக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் பிட்டவெள சுற்றுலா நிலையத்தின் கீழ்மாடி குறித்த நிர்மாண பட்டியலில் குறிப்பிடப்பட்ட வேலை பகுதிகளில் இருந்து 20 சதவழுதம் மாத்திரம் நிறைவேற்றப்பட்டு இருக்கையில் மற்றும் வேலை பூர்த்தி செய்யப்படாத இருக்கையில் இல்லை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக பரிந்துரைக்கப்பட்டு ரூபா 3,354,894 ஆன பட்டியல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட வேலை பகுதிகள் நிறைவேற்றப்படாமல் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | அந்நாட்களில் காணப்பட்ட மூலப்பொருள் பற்றாக்குறை மற்றும் மூலப்பொருட்களின் விலை அடிக்கடி உயர்வடைந்தமை காரணமாக செயற் திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டு தொகையை நிறுத்தி வைப்பதற்காக இறுதி பட்டியல் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஒப்பந்தக்காரருக்கு எவ்வித கொடுப்பனவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதாக | நிறைவேற்றப்பட் வேண்டிய வேலைக்காக பட்டியல் தயாரிக்கப்பட வேண்டியது தான் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 07 பதவிகளுக்கரிய 11 உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்பட்டது. | இது தொடர்பாக மாதாந்த உயர்மட்ட முகாமைத்துவத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் |
| (ஆ) | இடமாற்றம் பெற்று வந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் மீளாய்வாடின் ஏப்ரல் 04 ஆம் திகதி முதல் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிக்கள பரிசோதனையில் ஈடுபட்ட 108 நாட்கள் தொடர்பான உறுதிப்படுத்தல் அறிக்கை ஒன்று இல்லாமல் இருந்ததுடன் அக்காலப் பகுதியில் அங்கீகாரம் இன்றி 76 நாட்கள் அலுவலத்திற்கு வெளியேறி சென்றிருந்தார். அலுவலகத்தின் கடமையாற்றிய 14 நாட்களில் 13 நாட்கள் அலுவலகத்தில் வெளியேறிய நேரத்தை பதிவு செய்து வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டு இருக்கவில்லை. இக்காலப் பகுதியில் சம்பளமாக ரூபா 443,835 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உரிய பரிசோதனைகளை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து 11 ஆண்டுகளுக்கு 10 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 503,194 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகள் அறவிடப்பட்டு வருவதாக | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஜனவரி 12 ஆம் திகதிய DMA/01-2019(1) ஆம் இலக்க முகாமைமைத்துவ கணக்காய்வு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரகாரம் உள்ளக கணக்காய்வு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அச்சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்ட எடுக்கவில்லை. | அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 29 செலவின விடயங்களில் 13 சதவீதம் முதல் 659 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதுடன் 32 செலவின விடயங்களில் 14 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. மேலும் 11 செலவின விடயங்களில் நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் பாதீடு தயாரிக்கம் கவனத்தை செலுத்தி நடவடிக்கை எடுப்பதாக | தேவைப்பாட்டினை இனங்கண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |